<u>**DEPOSITION OF WITNESS**</u>
*(Chapter XXIII Code of Criminal Procedure)*
***Assistant Sessions Judge, Sankari***
<u>**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**</u>

*Calender* }
*Miscellaneous* }
*Preliminary Register* }
*Sessions* } *Case No.****SC.67/2025***

*Deposition of Witness* { *PW.**1***
{ *Prosecution*
{
*Name* : தங்கபாண்டி
*Father's Name* :
*Taluk* :
*Calling* :
*Religion* :
*Age* :

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.11.2025.*

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ஆம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் சங்ககிரியில் வசிக்கிறேன். நான் அரசு மதுபான கடை எண் 7210 உடன் இணைந்த மதுபான கூடத்தை அரசு ஒப்பந்ததாரராக இருந்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த புகாரை நான் எழுதிக் கொடுக்கவில்லை. நான் வேறு ஒரு வழக்கு விசாரணைக்காக சங்ககிரி காவல் நிலையம் சென்றபோது

போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். அதனால் நான் மேற்படி புகாரில் கையெழுத்து செய்து கொடுத்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையின்போதும் கடந்த 10.01.2021 அன்று இரவு 8.30 மணி சுமாருக்கு சங்ககிரி மலையடிவாரம் வழியாக சென்றபோது மசூதி அருகே நின்று கொண்டிருந்த பாலன் மகன் மூர்த்தி, செங்கோடன் மகன் சண்முகம், பழனியப்பன் மகன் கனகராஜ் ஆகியோருடன் மேலும் இரண்டு நபர்கள் கலியனூர் பிரிவு அருகே சென்று அந்த வழியாக பைபாஸ் ரோட்டில் போகும் லாரிகளை நிறுத்தி பணம் பறிக்கலாம் என்று பூட்டிய வீடுகளை உடைத்து திருடலாம் என்றும், அதற்காக மிளகாய் பொடி, கத்தி, இரும்பு கம்பி, உருட்டுக்கட்டை, மங்கி குல்லா ஆகியவற்றை தயார் செய்யவேண்டும் என்று கனகராஜ் இடம் சொல்லிக்கொண்டு இருந்ததாகவும், இரவு 2.00 மணிக்கு கலியனூர் பிரிவுக்கு எல்லோரும் வந்து விடவேண்டும் என்று பேசிக்கொண்டதாகவும், எதிரிகள் அன்றைய தினம் இரவிலேயே திருடவோ அல்லது வழிப்பறி செய்யவோ வாய்ப்புள்ளது என தெரிய வந்ததால், காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

ஒப்பம்/-தங்கபாண்டி

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.